# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 108/2014** **Date:28.04.2026.**

**(DW1)- முருகன்**

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. எனக்கு எழுதப்படிக்க தெரியும் என்றால் தமிழ் எழுதப்படிக்க தெரியும். தாவா சொத்து சம்பந்தமாக பத்திர பதிவு துறை பதிவாளருக்கு நான் ஒரு புகார் கொடுத்தேன் என்றாலும் என்னிடம் காட்டப்படும் ஆவணம் வாதிக்கு பதிவாளர் மூலம் அனுப்பட்ட மேற்படி புகாரின் நகல் மற்றும் அஞ்சலக உறை என்றாலும் சரிதான். மேற்படி ஆவணம் **வா.சா.ஆ.23** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வா.சா.ஆ.23 ஆவணத்தில் தாவா சொத்தில் சேகர் ரூ. 3500000/- மதிப்பிலான வீடு கட்டியுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சேகர் அவரது இடத்தில் கட்டியுள்ளார் அதை செட்டில் மெண்ட் ஆவணத்தில் குறிப்பிடவில்லை.

2. நீதிமன்றத்தில் இருந்து ஆணையர் தாவா இடத்தை பார்வையிடும் போது நான் உடன் இருந்தேனா என்றால் நான் உடனில்லை எனக்கு அழைப்பு இல்லை. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை பற்றி தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை நான் பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை. நாளது தேதி வரை நான் நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்தை பார்க்கவில்லையா என்றால் பார்க்கவில்லை. எனக்கு நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் குறித்து தெரியும் என்றாலும் அது எனக்கு பாதகமாக இருந்தும் நான் ஆட்சேபணை தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

3. நான் தாவா சொத்தை எப்போது கடைசியாக பார்த்தேன் என்றால் தேதி நினைவில்லை 2014 ஆம் வருடம் மார்ச் மாதத்தில் பார்த்தேன். நான் மாடசாமியிடம் இருந்து கிரயம் பெறுவதற்கு முன்பு சொத்தை பொறுத்து வில்லங்கம் பார்த்தேனா என்றால் பார்த்தேன். மேற்படி வில்லங்க சான்று என்னிடம் உள்ளது என்றாலும் அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் என்றாலும் சரிதான். மேற்படி வில்லங்க சான்றிதழில் 02.01.2012 தேதியில் சேகர் அவரது மனைவி ஞானசெல்விக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் (பதிவு எண் 7/2012) குறிப்பிடப்பட்டு இருந்தது என்றால் சரியல்ல. நான் தற்போது அந்த வில்லங்க சான்றிதழ்ளை கொண்டு வந்துள்ளேனா என்றால் கொண்டு வந்துள்ளேன். சாட்சி மேற்படி ஆவணத்தை சமர்பித்தார். மேற்படி ஆவணம் **பி.வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. பி.வா.சா.ஆ. 5 ஆவணத்தில் சேகர் அவரது மனைவிக்கு கொடுத்த ஆவணம் குறித்த

குறிப்புகள் உள்ளது என்றால் சரிதான், ஆனால் அது 2014 ல் எடுக்கப்பட்டது. பி.வா.சா.ஆ.5 வில்லங்க சான்றிதழை போல் எத்தனை வில்லங்க சான்றிதழ் வைத்துள்ளேன் என்றால் 2012 ல் சொத்து வாங்குவதற்கு முன்பு ஒரு வில்லங்கம் பார்த்தேன், பின் பி.வா.சா.ஆ.5 வில்லங்க ஆவணத்தை பார்த்தேன். 02.01.2012 செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு முன்பு 18.01.2012 ல் சொத்தை பொறுத்து உரிமை மற்றும் அனுபவம் இல்லாத 1 ஆம் பிரதிவாதியிடம் இருந்து நான் ஆவண எண் 295/2012 ஆவணம் மூலம் மோசடியாக கிரயம் பெற்று நில அபகரிப்பு ஏற்படுத்து உள்ளேன் என்றால் சரியல்ல, நான் வாங்கும் சமயத்தில் 1 ஆம் பிரதிவாதி பெயரில் பத்திரம், தீர்வை ரசீது மற்றும் வில்லங்கம் இருந்தது.

5. மேற்படி நான் குறிப்பிட்டுள்ள 1 ஆம் பிரதிவாதியின் பெயரில் உள்ள ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன் அவர் தாக்கல் செய்திருப்பார். நான் அவ்வாறு எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆரம்ப காலத்தில் எனக்கும் 1 ஆம் பிரதிவாதிக்கும் ஒரே வழக்கறிஞர் தான் என்றாலும் ஒரே எதிருரை தான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் எதிருரையில் உள்ள கையெழுத்து என்னுடையதுதானா என்றால் என்னுடையது தான். மேற்படி எதிருரையில் என்னுடன் 1 ஆம் பிரதிவாதி கையெழுத்து போட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

6. நான் கிரயம் பெற்ற ஆவணத்தில் தாவா சொத்தை பொறுத்து வில்லங்கம் இருந்தால் அதற்கு மாடசாமி பொறுப்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சேகர் அவரது மனைவிக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் குறித்து மாடசாமியிடம் ஏதேனும் கேட்டேனா என்றால் கேட்டேன் அதற்கு அவர் செட்டில்மெண்ட் ஆவணம் குறித்து அவருக்கு எதுவும் தெரியாது என்று குறிப்பிட்டார். இவ்வழக்கில் 18.09.2014 மற்றும் 02.03.2015 தேதிகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வக்காலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதானா என்றால் என்னுடையது தான். மேற்படி வக்காலத்துகளில் மாடசாமி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான், என்னுடன் கையெழுத்து செய்யவில்லை வழக்கறிஞர் பெற்று இருப்பார்.

7. எனக்கு கிரயம் கொடுத்தது குறித்தும் தாவா வழக்கு குறித்தும் மாடசாமி சாட்சியம் அளிக்க வருவாரா என்றால் வருவார். மாடசாமி நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க உடல்நிலையில் தான் உள்ளார் என்றால் உடல்நிலை சரியில்லாமல் உள்ளார், நான் கேட்டதற்கு சாட்சியம் அளிக்க வருவதாக கூறியிருந்தார். இவ்வழக்கில் மாடசாமி 1 ஆம் பிரதிவாதி என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதியை ஏன் எனக்கு முன்பு விசாரிக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1 ஆம் வாதியின் அக்கா சுசிலாவை தான் நான் திருமணம் செய்துள்ளேன் என்றால் சரிதான். எந்த வருடம்

திருமணம் நடைபெற்றது என்றால் நினைவில்லை, 1988 அல்லது 1989 இருக்கும். திருமணத்திற்கு முன்பு எனது மனைவி எனக்கு உறவினரா என்றால் நெருங்கிய உறவினர் ஆவார். சுசிலாவின் அப்பாவின் பெயர் என்ன என்றால் ராமசாமி ஆகும். மேற்படி ராமசாமி நுல்லிவிளை கிராமத்தில் புகழ் பெற்ற தட்ச்சர் என்றால் அது பற்றி சரியாக தெரியாது.

8. நுள்ளிவிளை கிராமத்தில் மேற்படி ராமசாமி உழவுகலப்பை செய்வதில் பிரசித்தி பெற்றவர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ராமசாமி எவ்வாறு கையெழுத்து இடுவார் என்பதை பற்றி தெரியுமா என்றால் தெரியாது. ராமசாமியுடன் இவ்வழக்கில் வா.சா,4 ஆக விசாரிக்கப்பட்ட தபசில் சொத்தின் ஆதி உரிமையாளர் செய்துக்கொண்ட கிரய ஒப்பந்தம் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கிரய ஒப்பந்ததின் நகல் எனக்கு வழக்கு தாக்கல் செய்த போது அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நுள்ளிவிளை கிராமத்தில் கீழமேல் பிரதான சாலை உள்ளது என்றால் சரிதான். மேற்படி ரோட்டிற்கு வடபுறம் தாவா இடம் உள்ளது என்றால் மேற்கு பக்கமாக வந்தால் வடபுறம் இருக்கும்.

9. மேற்படி ரோட்டிற்கு தெற்கே எனது மாமனார் ராமசாமி வீடு உள்ளது என்றால் சரிதான். ராமசாமிக்கு நான்கு ஆண் மக்கள் என்றாலும் அதில் இரண்டு நபர் இறந்துவிட்டனர் என்றாலும் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தம் எழுதும் போது தாவா சொத்து வாதி சேகருக்கும் ராமசாமி மகன் ரவிக்கு அவர் குடியிருந்த வீட்டை ஒதுக்குவதற்கும் ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணம் எழுதிய சமயத்தில் 1 ஆம் வாதி சேகர் மாலதீவில் இருந்தார் என்றால் அது பற்றி தெரியாது. வா.சா.ஆ.1 ஒப்பந்தம் போடும் சமயத்தில் 1 ஆம் வாதி ஒப்பந்த முன் பணத்தை கொடுத்தார் என்றால் ஒப்பந்தம் போட்டது பற்றி எனக்கு தெரியாது.

10. மேற்படி வா.சா.ஆ.1 ஒப்பந்ததின் படி வா.சா.ஆ.2 கிரய ஆவணம் எழுதப்பட்டது என்றாலும் மீதமுள்ள கிரய பணத்திற்காக கடனுக்கு ஈடாக வா.சா.ஆ.3 ஆவணம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல, எனது தாய் பத்திரத்தில் அவ்வாறு எந்த குறிப்பும் இல்லை. எனக்கும் மாடசாமிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் உள்ளதா என்றால் இல்லை. எனக்கும் மாடசாமிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 கிரய ஒப்பந்த காலத்தில் இருந்து 1 ஆம் வாதியின் அப்பா அனுபவத்தில் இருந்தார் என்றால் தெரியாது. கிரய ஒப்பந்த காலத்தில் இருந்து ராமசாமி இருக்கார் அல்லவா அவருக்கு பாத்தியப்பட்ட தட்ச்சு பட்டறை மற்றும் மாட்டு தொழுவம் மற்றும் வைக்கோல் படப்பு வைத்திருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

11. ஆதியில் இந்த இடம் பள்ளமாக இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இடம் பள்ளமாக இருந்ததை 1 ஆம் வாதி 50 லோடு மணல் போட்டு நிரப்பி உள்ளார் என்றால் அது பற்றி

எனக்கு தெரியாது. தாவா இடத்தை பார்க்கும் போது எத்தனை இடங்களில் சுற்று சுவர் இருந்தது என்றால் 3 இடங்களில் இருந்தது, ரோட்டு ஓரத்தில் சுற்று சுவர் இல்லை. தாவா இடத்தில் தெற்கு பக்கம் உள்ள சுற்று சுவர் யாரால் கட்டப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது, நான் கிரயம் பெறும் சமயத்தில் கிடையாது, ஆனால் வழக்கு தாக்கல் செய்தபின் சுவர் உள்ளது. தெற்கு பக்க சுவரில் ஒரு வாசல் தெற்கு பார்த்து உள்ளது என்றால் சரிதான். மேற்படி வாசல் வழியகத்தான் 16 செண்ட் சொத்திற்கு போகவும் வரவும் செய்வார்கள் என்றால் சரிதான், தற்போது பாதையை அடைத்து 1 ஆம் வாதி கட்டியுள்ளார்.

12. மேற்படி பாதையை அடைத்து கட்டிய விபரத்தை எனது நிரூபண வாக்குமூலத்தில் அல்லது எனது எதிருரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகைப்படங்கள் தாவா இடம் சம்பந்தப்பட்டவை என்றால் சரிதான், ஆனால் பத்திரம் முடித்தபின் கட்டப்பட்டதாகும். மேற்படி புகைப்படங்கள் **வா.சா.ஆ.24** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் கிரயம் பெற்ற ஆவணத்தில் கிழமேல் அளவு மற்றும் தென்வடல் அளவு உள்ளதா என்றால் அது பற்றி தெரியாது. நான் கிரயம் பெறுவதற்கு முன்பு தாவா சொத்திற்கு பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் மாடசாமி பெயரில் இருந்தது. மாடசாமி பெயரில் உள்ள பட்டாவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி தெரியாது.

13. தாவா சொத்தின் சர்வே எண் 903/18 என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வரைபடம் மேற்டிப சர்வே எண்ணிற்கான புல வரைபடம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் **வா.சா.ஆ.25** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்து பூமியில் மேற்கு பக்கம் கிழக்கு பக்கம் என்று தனிதனியாக பூமியில் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு மேற்கு பக்கம் உள்ள சொத்திற்கான கிழமேல் மற்றும் தென்வடல் அளவு என்ன என்றால் நினைவில்லை. தாவா 16 செண்ட் சொத்தில் மேற்கு பக்கம் மற்றும் கிழக்கு பக்கம் சொத்து என்று பிரித்து காட்டுவதற்கு அடையாளங்கள் உள்ளதா என்றால் நான் சொத்தை கிரயம் பெறும் சமயத்தில் இருந்தது. பி.வா.சா-ஆ.25 வரைபடத்தில் எந்த பக்கத்தில் எல்கை கற்கல் இருந்தது என்றால் வரைபடத்தை வைத்து என்னால் கூற முடியாது.

14. தாவா சொத்தை கிரயம் பெறுவதற்கு முன்பு நான் உட்பிரிவு செய்தேனா என்றால் உட்பிரிவு செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ஆவணத்தை நான் எப்போது நகல் எடுத்து பார்த்தேன் என்றால் 2014 வருடத்தில் நகல் எடுத்து பார்த்தேன். 2014 ஆம் வருடத்தில் நான் நகல் எடுத்து பார்த்த ஆவணம் எனது கைவசம் உள்ளது என்றால் உள்ளது. வா.சா.ஆ.4 ஆவணம் செல்லாது என்று நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் மேல் நடத்தாமல் தள்ளுபடி ஆகிவிட்டது, அது குறித்து மேல்முறையீடு நிலுவையில் உள்ளது. மேல்முறையீடு எதுவும் இல்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

15. வா.சா.ஆ.4 ஆவணத்தை பற்றி தெரிந்து கொண்டு வா.சா.ஆ.5 ஆவணத்தை மாடசாமி பெயரில் அவரது கையெழுத்தோ, கைரேகையோ இல்லாமல் ஆள்மாறாட்டம் செய்து எனது தம்பி மனோகரன் மற்றும் எனது மனைவி சகோதரி ஜெயாவிற்கும் நான் ஏற்பாடு செய்த திருமணம் நடக்காமல் போனதால் அதில் ஏற்பட்ட வருத்தம் மற்றும் அவமானத்தால் வா.சா.ஆ.5 ஆவணத்தை மோசடியாக ஏற்படுத்தி கொண்டோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்தை பொறுத்து நான் எந்த பிரதிபலனும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் வருமான வரி செலுத்துகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் நான் 1 ஆம் பிரதிவாதிக்கு எவ்வளவு பணம் கொடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ரூபாய் 71228/- பணத்தை பத்து தவணைகளாக கொடுத்தேன், முதல் தவணை எப்போது கொடுத்தேன் என்றால் 2011 ஆம் வருடம் நவம்பர் மாதம் கொடுத்தேன்.

16. நான் பத்து முறை கொடுத்த பணம் எனது வருமான கணக்கில் துலங்குமா என்றால் நான் கையிலிருந்து கொடுத்தேன் அது வருமான கணக்கில் துலங்குமா என்பது தெரியாது. தற்போது சாட்சி ஞாபகம் இல்லை என்று தன்னிச்சையாக கூறுகிறார். எனக்கு புத்தன்குடியிருப்பு ஊரில் பூர்வீக இடமும் கிரயம் பெற்ற இடமும் உள்ளது என்றால் சரிதான். நான் கிரயம் பெற்ற இடத்தில் 3 மாடி கொண்ட வீடு கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வீடு அமைந்துள்ள இடம் வில்லங்கமான இடம் என்றாலும் 1 ஆம் பிரதிவாதி ஏற்பாட்டில் தான் மோசடியாக கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

17. தற்போது நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் தெங்கம்புதூரில் குடியிருந்து வருகிறேன். தற்போது கோட்டாரில் வள்ளி ஸ்டோர்ஸ் என்ற கடை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். மாடி பகுதியை வங்கிக்கு வாடகைக்கு விட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது கடையில் செல்போன் டவர் உள்ளது என்றால் சரியல்ல. வாதி தரப்பு சாட்சி 3 தாவா சொத்தின் மேற்கு பக்க சொத்தின் உரிமையாளர் ராபர்ட் சிங் என்றால் எனது பத்திரத்தில் மேற்கு பக்க எல்கையாக மேற்படி பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது சாட்சியம் அளித்தாரா என்ற விபரம் எனக்கு தெரியாது. தாவா இடம் ஆதியில் ராபர்ட்சிங்கின் உறவினர் வில்பிரட் ராஜ் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது.

18. மேற்படி நபர்களை விசாரித்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் வாதி யாரை விசாரித்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு வாதி தீர்வை ரசீது தாக்கல் செய்துள்ளார் என்றால் மேற்படி ரசீது மோசடி பத்திரம் ஏற்படுத்தியபின் போட்டதாகும். நான் தாவா சொத்திற்கு நான் தீர்வை செலுத்தி உள்ளேனா என்றால் வாதியின் பெயரில் போலி பத்திரம் இருப்பதால் இது வரை கட்டமுடியவில்லை. தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு கதவு எண் 25/65 ஏ மற்றும் தட்ச்சு பட்டறை 25/65 பி கொண்ட இரண்டு சொத்துக்களுக்கு வரி ரசீது போடப்பட்டுள்ளது என்றால் அது போலி ஆவணங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ரசீதாகும்.

19. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா-ஆ. 3 மற்றும் 4 ஆவணங்களின் நகல்கள் எனக்கு யார் எடுத்து கொடுத்தார்கள் என்றால் நான் மனு செய்து வாங்கினேன். மேற்படி ஆவணங்கள் இரண்டும் சிறப்பு அரசு வழக்கறிஞரால் நகல் பெறப்பட்டதாக தெரிய வருகிறது என்றால் சரியல்ல.

பி.வா.சா-ஆ.4 ஆவணம் நான் முழுமையாக தாக்கல் செய்யவில்லை என்றாலும் எனவே அதை ஏற்கொள்ள முடியாது என்றாலும் சரியல்ல. மேற்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தேவதாஸ் என்ற காவல் ஆய்வாளரை பணி நீக்கம் செய்துவிட்டனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உண்மையில் மாடசாமி தான் பாதிக்கப்பட்ட நபர் என்றாலும் அவர் தான் புகார் கொடுக்க வேண்டும் என்றாலும் நான் கொடுத்த புகார் ஏற்புடையதல்ல என்றாலும் சரியல்ல.

20. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1,2 ஆவணங்களில் வழக்கின் முடிவு படி நடந்துக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, கோட்டாட்சியர் பட்டா மாறுதல் செய்ய உத்தரவு போட்டார். மேற்படி கோட்டாசியர் உத்தரவு மீது மாவட்ட வருவாய் அலுவலரிடம் தாக்கல் செய்துள்ள சிராய்வு மனுவில் கோட்டாட்சியரின் உத்தரவு ரத்து செய்யப்பட்டது என்றாலும் இவ்வழக்கு முடிவு படி நடந்துக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. மேற்படி மாவட்ட வருவாய் அலுவலரின் உத்தரவு மீது நான் 30 நாளில் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யாததால் மேற்படி மாவட்ட வருவாய் அலுவலரின் உத்தரவு இறுதியானது என்றால் சரியல்ல.

21. மாடசாமி பெயரிலோ எனது பெயரிலோ பட்டா மற்றும் தீர்வை அனுபவம் எந்த காலத்திலும் இருந்ததில்லை என்றால் சரியல்ல. நான் 19.07.2014 ல் கோட்டாசியரிடம் கொடுத்த மனுவின் அடிப்படையில் ஏற்பட்ட பிரச்சனை சம்பந்தமாக வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல, 2012 ல் பிரச்சனை ஆகிவிட்டது. எனது நிரூபண வாக்குமூலத்தில் குடும்ப பெரியவர்கள் முன்பு சமரசம் பேசியதாக குறிப்பிட்டுள்ளேன் யார் முன்னிலையில் பேசினோம் என்றால் எனது மனைவியின் அப்பா, அம்மா, தங்கை, தம்பி ஆகியோர்களை வைத்து பேசினேன். மேற்படி சமாதான பேச்சு வார்த்தை முடிவு எட்டப்படவில்லை என்றால் சரிதான். நான் குறிப்பிடுவது போல் யாரும் சமாதானம் பேசவில்லை என்றால் சரியல்ல.

22. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.3, முதல் தகவல் அறிக்கையில் 6 நபர்கள் எதிரிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றால் சரிதான். அதில் இரண்டு சாட்சிகள், பத்திர எழுத்தர், சார்பதிவாளர் ஆகியோர்களை நீக்கிவிட்டனர் என்றால் சரியல்ல. திருநெல்வேலி நில அபகரிப்பு சிறப்பு தனி நீதிமன்றத்தில் குற்ற வழக்கு விசாரிக்கப்பட்டதா என்றால் வாய்தாவிற்கு சென்றேன் விசாரிக்கப்படவில்லை. வா.சா.ஆ.1 ஒப்பந்தத்தின் அடிப்படையில் வா.சா.ஆ.2,3 எழுதப்பட்டு மாடசாமி மற்றும் வாதிகளுக்கு இடையேயான கொடுக்கல் வாங்கல் தீர்ந்த பின்பு வா.சா.ஆ.4 ஆவணம் உண்மை அடிப்படையிலும் அனுபவத்தின் அடிப்படையிலும் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. அதன் பின்பு மோசடியாக நான் வா.சா.ஆ.5 ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் எனது பக்கம் உண்மை இல்லாததால் மாடசாமி எனது சார்பாக சாட்சியம் அளிக்க வரமாட்டார் என்றால் சரியல்ல. நான் பொய்யான சங்கதிகளை கூறி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் வாதிகளின் வழக்கு உண்மையானது என்றாலும் வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

(ஒப்பம்)

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**